KANTON AARGAU

**DEPARTEMENT**
**GESUNDHEIT UND SOZIALES**
Abteilung Gesundheit

கேண்டனல் மருத்துவசேவை

29 அக்டோபர் 2021

## பெற்றோர்களுக்கான தகவல்

### ஆர்காவ் தொடக்கப் பள்ளிகளில் 2021/22 குளிர் காலத்தில் கோவிட்-19 நோயைச் சமாளித்தல்

நல்ல கல்வியுடன் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதை உறுதிசெய்வது முக்கியம் ஆகும். பள்ளியில் மாணவர் அல்லது ஆசிரியர்கள் நோய்வாய்ப்படும் நிகழ்வில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதுடன், கோவிட்-19 காரணமாகப் நன்கு வரையறுக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகளை நிறுவுவது அந்த இரண்டு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

எனவே, தயவுசெய்து பின்வரும் கருத்துகளைக் குறித்துக் கொள்ளுங்கள். இவை ஆர்காவ் தொடக்கப் பள்ளிகளில் 1 நவம்பர் 2021 முதல் செயலுக்கு வரும்:

- பின்வருபவை அனைத்துக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கும் எல்லா நேரங்களிலும் பொருந்தும்: அறிகுறிகளை அனுபவிக்கும் எவரும் பள்ளிக்குச் செல்லமாட்டார், அவர்களுக்குச் சோதனை செய்யப்பட வேண்டும். 16 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு கோவிட் பரிசோதனை இலவசமானது.

- நோய் உறுதி செய்யப்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் கட்டாயம் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டு, அதை உடனடியாகப் பள்ளிக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதன் கேண்டனல் தொடர்பு கண்டறியும் மையம் (CONTI) பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்புகொள்ளும்.

- ஒரு வகுப்பில் ஒரே வாரத்துக்குள் இரண்டு அல்லது அதிகமானவர்களுக்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டால், அந்த வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயம் ஸ்பிட் சோதனை செய்யப்பட வேண்டும் என்று கேண்டனல் மருத்துவசேவை ஆணையிடுகிறது. மாதிரிகள் சேகரிப்பு பள்ளியிலேயே நடைபெறும். வருகை தராதவர்கள் தாங்களாகவே பரிசோதனை செய்துகொண்டு, இந்தச் சோதனையின் முடிவைப் பள்ளிக்கு தெரிவிக்க வேண்டும்.

- மூன்று அல்லது அதிகமான நோய் உறுதி செய்யப்பட்டவர்கள் உள்ள பாதிக்கப்பட்ட வகுப்புகள், கட்டாயம் வகுப்பில் ஆடாமல் இருப்பதுடன் உடல் தொடர்புள்ள விளையாட்டுகளில் 10 நாட்கள் பங்கெடுக்காமல் இருக்க வேண்டும். மேலும், தொடக்கப் பள்ளி நிலை 5 முதல் பாதிக்கப்பட்ட வகுப்புகளுக்கு, உள்ளரங்கில் இந்தக் காலகட்டத்தில் 10 நாட்கள் முகக் கவசம் அணிவது கட்டாயம் ஆகும். தொடக்கப் பள்ளி நிலை 4 வரையுள்ள வகுப்புகளுக்கு இரண்டு-கிளாஸ் கற்பித்தல் இருக்காது (பல்-வகுப்பு துறைகள் தவிர.) முழுவகுப்புக்கும் பரிசோதனை செய்யப்படும் போது, தொடர்ந்து கொண்டும் யாருக்கும் நோய் உறுதி செய்யப்படவில்லை எனில், இந்த உடனடி நடவடிக்கைகள் தாமதமின்றி விலக்கிக் கொள்ளப்படும்.

- கேண்டீன்ஸ், மருத்துவசேவை அல்லது CONTI வழங்கும் ஆணைகள் அனைவரையும் கட்டுப்படுத்தும்.

மேலுள்ள அனைத்து நடவடிக்கைகளின் நோக்கமானது (வகுப்பு) தனிமைப்படுத்தலுக்கான தேவையைக் குறைத்து கூடுமானவரை தொந்தரவு இல்லாமல் பள்ளி தொடர்வதை அனுமதிப்பது ஆகும். அதே சமயம், நோய் தொற்று மற்றும் கோவிட்-19 வைரஸ் மேலும் பரவுவதற்கான அபாயம் குறைவாக இருக்க வேண்டும்.

மேலும், மறு-பரிசோதனையில் பங்கெடுப்பதற்கு அனைத்து பள்ளிகளுக்கும் வாய்ப்பு இருக்கிறது. அனைத்து குழந்தைகளும் பங்கெடுப்பதை நாங்கள் உறுதியாகப் பரிந்துரைக்கிறோம். பள்ளிச் சூழ்நிலையில் கோவிட் 19 வைரஸ் பரவுவதைக் கூடுமானவரை தடுப்பதற்கு இது எளிமையான, ஆனால் முக்கியமான நடவடிக்கை. நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவும்.

மேலும் விரிவான தகவல்களுக்கு, தயவுசெய்து பின்வரும் இணைய முகவரிக்கு வருகை தருக www.ag.ch/coronavirus-schulen.

இந்த இலக்குகளை நிறைவேற்றுவதில் உங்களுடைய உதவியை சுகாதார அதிகாரிகளும், பள்ளிகளும் உண்மையில் உங்கள் உதவியைப் பாராட்டுவார்கள். மிக்க நன்றி